பரிசுத்த பவுல் ஆலயம், குவைத்

# அஹமதி தமிழ் திருச்சபை

பரிசுத்தஆவி உங்களிடத்தில்
வரும்போது நீங்கள்
பெலனடைந்து
எருசலேமிலும்,
யூதேயா முழுவதிலும்,
சமாரியாவிலும்,
பூமியின் கடைசிபரியந்தமும்,
எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள்
என்றார். (அப் 1:8)

மலர் 12
இதழ் 11

செய்தி மலர்
மார்ச் 2012

# செயலாளரிடமிருந்து



கர்த்தருக்குள் மிகவும் பிரியமானவர்களே!
அன்பராம் இயேசுவின் இன்பநல் நாமத்தில் உங்கள்
அனைவருக்கும்என் அன்பின் வாழ்த்துதல்களை
தெரிவித்துக்கொள்கிறேன்

சென்றமாதம் முழுவதும் நம்மை அவருடைய தயவுள்ள சித்தத்தின்படியே பாதுகாத்துநடத்தினபடியால் அவருக்கு நன்றி செலுத்துவோம். சபை ஆராதனைகள் மற்றும் சபை ஊழியங்களை கர்த்தர் பொறுப்பேற்று நடத்தி தந்தமையால் கர்த்தருக்கு நன்றி செலுத்துகிறேன்.

இந்த வருடத்தின் மூன்றாம் மாதத்தில் வந்திருக்கிறோம்.

இந்தமாதம் கர்த்தருடையபிள்ளைகள் அநேகர் உபவாசத்தோடு இருந்து கர்த்தரின் பாடுமரணங்களை தியானிக்கின்ற மாதம்.உபவாசம் என்பது என்ன அதன் பலன்கள் என்ன என்பதை பற்றி தெரிந்து கொள்வது அவசியம். உபவாசம் மற்றவர்கள் காணவேண்டும் என்று முக வாடலாயிராமல் கர்த்தருக்கே காணப்படும்படியான உள்ளான மனுஷன் உபவாசிக்க வேண்டும்.

உள்ளான மனுஷனுடைய கிரியைகளாவன ரோமர் 3:13-18 ஐ வாசிக்கும்போது தொண்டையானது திறக்கபட்ட பிரேதகுழியை போலிருக்கிறது.
(வாய் திறந்து பேச ஆரம்பித்தால் கேட்கிறவர்களை முகம் சுளிக்க செய்கிறது)
நாவோ வஞ்சனையினாலும் கபடினாலும் நிறைந்திருக்கிறது: உதடுகளின் கீழ் பாம்பின் விஷத்திற்கொப்பானவிஷம் நிறைந்ததாக காணப்படுகிறது
(நீதி 27:6 அதிகாலையில் எழுந்து உரத்தசத்தத்தோடே தன் சிநேகிதனுக்கு சொல்லும் ஆசீர்வாதம் சாபமாக மாறும் என்று சொல்லபட்டிருக்கிறது .
கண்களுக்கு முன்பாக தெய்வ பயமில்லை கால்களோவென்றால் இரத்தம் சிந்த தீவிரிக்கிறதாக இருக்கிறது. மேற்கூறிய உள்ளான மனுஷனுடைய கிரியைகள் அழிக்கப்படவேண்டும்.

ஏசாயா 58:13 கர்த்தர் கொடுத்த பரிசுத்த நாளை மகிமையின் நாளென்றும் மனமகிழ்ச்சியின் நாளென்றும் நினைத்து அந்த நாளில் நம் இஷ்டப்படி நடக்காமலும் சொந்த பேச்சை பேசாமலும் நமக்கு இஷ்டமான பாதையில் செல்ல தீவிரிக்கும் நாம் கால்களை ஒடுக்கி அந்த நாளில் கர்த்தரின் ஆலயத்திற்கும் ஆராதனைக்கும் முக்கியத்துவம் கொடுத்து பரிசுத்த நாளை பரிசுத்தமாய் ஆசரிக்க தீவிரிக்க வேண்டும் அக்கிரமத்தினாலும் பாவத்தினாலும் கட்டபட்டிருக்கிற மக்களின் கட்டுகளை அறுத்து அவர்களை விடுவித்து கர்த்தரின் வழிகளை போதித்து அவர்களை போஷித்து அவர்களை உடுத்துவித்து கர்த்தரின் வசனங்களை எடுத்து கூறி கர்த்தருக்கேற்ற பரிசுத்த பாதையில் அவர்களை வழி நடத்த

நம்மை சுற்றி இருக்கின்ற இருள் விலகி, மதியம் நாம் வெளியில் நிற்கும் போது நம்மை சுற்றிலும் எந்த விதமான இருளான நிழலும் காணப்படாதது போல நம்மை சுற்றிலும் தேவ மகிமையின் பிரசன்னம் நிறைந்திருக்கும்.

உன்ஆத்துமா திருப்தி ஆகி ஏசா 58:11 உன் எலும்புகளெல்லாம் வலிமை பெற்று தெய்வீக வல்லமையினால் நிறையப்பெற்று உலகபிரகாரமான குறைபாடின் மத்தியிலும் கர்த்தருக்கென்று கனி கொடுக்கின்ற சாட்சியின் வாழ்க்கை வாழ முடியும் மற்றவர்களை பற்றி குறை சொல்வதை தவிர்க்க வேண்டும் ஏசாயா 58:3,4. நம் சொந்த பேச்சை பேசாதபடி வசனங்களை வாசிப்பதிலும் மற்றவர்களோடு வசனங்களை பகிர்ந்து கொள்ளுதலிலும் நம்முடைய இச்சைகளை நிறைவேற்றும் காரியங்களை செய்யாதபடி மாம்சத்தின் கிரியைகளை அடக்கி வழக்கிற்கும் வாதுக்கும் குற்றம் செய்கிறதற்கும் தீவிரிக்கின்ற நம் கை கால்களை அடக்கி கர்த்தருக்கு பிரியமான காரியங்களை செய்ய அற்பணிக்க வேண்டும்.

இவ்விதமான செயல்களை இந்த உபவாசத்தின் நாட்களில் நாம் செய்ய அற்பணிக்கும் போது ஏசா 58 :14 கர்த்தரில் மனமகிழ்ச்சியாய் இருப்பாய், உன்னை பூமியின் உயர் ஸ்தலங்களில் (உன்னதஸ்தானத்தில் ) கர்த்தர் நடகக பண்ணுவார், யாக்கோபின் சுதந்திரத்தினால் உன்னை போஷிப்பார், ஏசா 58:8 நீதி உனக்கு முன்னாலே செல்லும் கர்த்தரின் மகிமை உன்னை பின்னாலே காக்கும் ஏசா 58:11 நீ நீர்பாய்ச்சலான தோட்டத்தை போலவும் வற்றாத நீரூற்றை போலவும் இருப்பாய்.

கர்த்தர்தாமே இந்த உபவாச நாட்களை மகிமையின் நாட்களாக மாற்றி தருவாராக கர்த்தரின் கிருபை உங்கள் அனைவரோடும் இருப்பதாக

தேவ சமாதானம் உங்கள் அனைவரோடும் இருப்பதாக.!
கர்த்தர் உங்கள் அனைவரையும் ஆசீர்வதிப்பாராக! ஆமென்!

இவண்
கர்த்தரின் பணியில்
அன்பு சகோதரன் **A.ஜஸ்டின் சுந்தரராஜ்**

கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதர சகோதரிகளுக்கு ஓர் அன்பான வேண்டுகோள், ஆண்டவர் தங்களுக்கு கொடுத்த தாலந்துகளை ஆண்டவருக்கென்று பயன்படுத்த ஓர் அரிய தருணம். நீங்கள் நன்கு பாடக்கூடிய தாலந்து உள்ளவர்களாக இருக்கலாம், அல்லது நன்றாக வாத்திய கருவிகளை வாசிக்கக் கூடிய தாலந்து உள்ளவர்களாக இருக்கலாம் அல்லது, PA System Operate பண்ணக் கூடிய Technical தாலந்து உள்ளவர்களாக இருக்கலாம். உங்களது தாலந்துகளை ஆண்டவருக்கென்று வெளிப்படுத்துங்கள். முன் வந்து ஆண்டவருடைய ஊழியத்தில் பங்கு பெறுங்கள், அப்படி கர்த்தருடைய ஊழியத்தில் பங்கு பெறும் வாஞ்சை உள்ளவர்கள், சபையின் செயற்குழுவையோ அல்லது அந்த ஊழியத்தை பொறுப்பெடுத்து நடத்துகிற சகோதரர். இயேசு ரெத்தினம் அவர்களையோ அனுகவும். (நன்றி)

# தேவ செய்தி





## தேவ பிள்ளைகளின் சாட்சி

**கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதர சகோதரிகளுக்கு இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள்!**

**இந்த மாத செய்திமலர் மூலமாக தேவ வார்த்தையின் மூலம் தங்கள் அனைவரையும் சந்திப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். செய்திக்கென்று எடுத்துக்கொண்ட வேத வசனம் ‘ பரிசுத்தஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசிபரியந்தமும், எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள் என்றார். (அப் 1:8)**

**ஆண்டவராகிய இயேசு சிலுவையிலே பாடுபட்ட பின்பு, நாற்பது நாளளவும் அப்போஸ்தலருக்கு தரிசனமாகி, <u>தேவனுடைய ராஜ்ஜியத்திற்குரியவைகளை</u> அவர்களுடனே பேசினார்.**

**<u>பூமிக்குரிய வைகளை அல்ல, தேவனுடைய ராஜ்ஜியத்துக்குரியவைகளை</u> அவர்களுடனே பேசினார்**

**நம்முடைய அன்றாட வாழ்க்கையில் அனேக காரியங்களை குறித்து பேசுகிறோம். சிலர்** TV Serial **-ஐ குறித்து பேசுவார்கள், மேலும் சிலர் மற்ற மனிதர்களை குறித்து குறைவாக பேசவேண்டும் என்றால் அவர்களுக்கு தேனில் இட்ட பனியாரம் சாப்பிடுவது போன்றது, நாம் அவர்களை போல (உலகத்ததிற்குரியவர்கள்) அல்ல, ‘ பூமிக்குரியவைகளை அல்ல, மேலானவைகளை நாடுங்கள்’ என்ற வசனத்தின்படி தேவனுடைய ராஜ்ஜியத்துக்குரியவைகளை பற்றி பேச வேண்டும். பரலோகமே, என் சொந்தமே, என்று காண்பேனோ? என பக்தன் பாடுகின்றான். இந்த லெந்து கால நாட்களிலே, தேவனுடைய ராஜ்ஜியத்துக்குரியவைகளை பற்றி அதிகமாய் பேச பழகிக் கொள்வோம்.**

**சிலர் பூமிக்குரியவைகளை குறித்தே பேசி, தங்கள் வாழ்நாளை எல்லாம் வீண்நாளாய், வருத்தத்தோடே கழிக்கிறார்கள். ஏன்? அவர்களுடைய பொக்கிஷம் பூமியிலே இருக்கிறது. பூமியிலே உங்கள் பொக்கிஷங்களை சேர்த்து வையாதேயுங்கள். அங்கே பூச்சியும், துருவும், அவைகளைத் கெடுத்து போடும், திருடரும் கன்னமிட்டு திருடுவார்கள். பரலோகத்திலே உங்கள் பொக்கிஷங்களை சேர்த்து வையுங்கள், உங்கள் பொக்கிஷம் எங்கேயோ அங்கே உங்கள் இருதயம் இருக்கும். மனுஷ னுடைய இருதயம் மகாகேடும் திருக்குள்ளதுமாயிருக்கிறது, காரணம் என்ன? அவன் பூமிக்குரியவைகளைபற்றியே யோசிக்கிறான், பேசுகிறான், ஆகானின் பொக்கிஷம் பூமியிலே இருந்தது, அது அவனுக்கு சாபத்தை கொடுத்தது, யூதாஸ்காரியேத்து பணத்தின் மேல் நம்பிக்கை வைத்தான். அது அவனுக்கு அழிவை தந்தது. சிலுவையில் அறையப்பட்ட ஒரு கள்ளன், இயேசுவை பார்க்க தன்னை அர்ப்பணித்தான். அவனுக்கு பரதீசு கிடைத்தது.**

**உலகம் பாவத்தை நேசிக்கிறது, பாவியை வெறுக்கிறது, இயேசு பாவத்தை வெறுக்கிறார், பாவியை நேசிக்கிறார். எனவேதான், சிலுவைபாடுகளுக்கு தன்னை**

ஒப்பு கொடுத்தார். உலகத்தின் ஆவி (மாம்ச ஆவி) நம்மில் இருக்கும் வரை, உலகத்தைதான்பார்த்துக் கொண்டிருப்போம். இயேசு சொன்னார் :- ' யோவான் ஜலத்தினாலே ஞானஸ்தானம் கொடுத்தான், நீங்கள்சில நாட்களுக்குள்ளே பரிசுத்த ஆவியினாலே ஞானஸ்தானம் பெறுவீர்கள்.'

பரிசுத்த ஆவியின் ஞானஸ்தானம், நமக்கு தேவை அதற்கு நாம் என்ன செய்ய வேண்டும். ' எருசலேமை விட்டு போகாமல் இயேசுவினிடத்தில் கேள்ளிபட்ட பிதாவின் வாக்குத்தத்தம் நிறைவேற காத்திருக்க வேண்டும் (அப் 1:5)

எருசலேம் அது தேவனுடைய வீடு(ஆலயம்)உள்ள இடம் தேவன் தங்கி இருக்கும் வாசஸ்தலம், நம்முடைய சரீரம் தேவனுடைய ஆலமாயிருக்கிறது. நாம்தாம்இன்று நடமாடும் எருசலேம்(Mobile Jerusalem)ஆக இருக்கிறோம். இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் ஜீவிக்கிறார்' என நம்மை அற்பணிப்போம். நான் என்கிற சுயம், பெருமை, அகந்தை, மேட்டிமை, --ஓழிய வேண்டும். கடந்த கால நாட்களிலே,அனேகர் சில உணவு வகைகளை ஒதுக்கிவிடுவார்கள் நாம் நம்மில் காணப்படுகிற நான் I ஐ ஓதுக்கி வைக்க, Temperary ஆக அல்ல Permanent ஆக ஒதுக்கி வைக்க பழக்க படுத்திக்கொள்வோம். அப்பொழுது நம்மில் காணப்படுகிற பாவ சுபாவங்கள் மறைந்து போகும். ' பாவமெல்லாம் பறந்தது...... இயேசுவின் இரத்தத்தினால்' என்று விடுதலையோடு பாடமுடியும்.

புது வருட வாக்குத்தத்தத்தோடு நின்று விடாமல், தேவன் அள்ளி அள்ளி கொடுக்கிற வாக்குத்தத்தங்களை கரம் நீட்டி வாங்கி கொள்ள நம்மை அற்பணிப்போம். வாக்குத்தத்தம் கொடுப்பது அவரது (தேவனுடைய) உரிமை, அதை பெற்றுக் கொள்வது நம்முடைய கடமை வேதத்தை வாசிப்பது நல்லதுதான், அதை தியானிக்கும் போது அது நமக்கு வாக்குத்தத்தங்களாக மாறுகிறது, தியானம் என்பது, சுவைத்து வசனத்தை உட்கொள்வது, அது தேனிலும், தெளிதேனிலும் மதுரமானது. வார்த்தையாக வந்த இயேசுவின் வார்த்தைகளை வாசிப்போம். தியானிப்போம், லெந்து நாட்களில், அதிகநேரம் இதற்கென தியானிப்போம், ஓய்வுநாளை பரிசுத்தமாய் ஆசாரிப்போம்.

பரிசுத்த ஆவியின், ஞானஸ்தானம் பெற. நாம் செய்ய வேண்டிய மற்றொன்று , பிதாவின் வாக்குத்தத்தம் நிறைவேற காத்திருக்க வேண்டும், காத்திருப்பது என்பது, தேவனுடைய சமூகத்தில் விழித்திருந்து, ஜெபிப்பது ஆகும், லெந்து நாட்களில் அதிகமான நேரத்தை, ஜெபத்தில் செலவிடுவோம், ஒரு நாளைக்கு ஒரு மணிநேரமாவது ஜெபிக்க பழகிக்கொள்வோம், உலக கடலில் மூழ்காமல் இருக்க நீச்சல் அவசியம், ஜெபம் நாம் அழிந்து போகாமல் இருக்க உதவுகிறது. காரணம் ஜெபிக்கும் போது, நாம் பரலோகத்தின் இயேசுவை பார்க்கிறோம் அப்பொழுது, அவருடைய கரங்கள் நாம் அழிந்து போகாமல் நம்மை நிலை நிறுத்தும் கரங்களாய் இருக்கிறது.

கர்த்தருடைய சமூகத்தில் காத்திருக்கும்போது ஆண்டவர் அவருடைய ஆவியை நமக்கு தருகிறார் உலகம் கொடுக்க முடியாது. புது பெலன் அவர் தருகிறார் ஏசாயா 40:31 படி கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்கள் புது பெலன் அடைந்து ..... கழுகுகளை போல .... எழும்புவார்கள். பரிசுத்த ஆவி வரும் போது, நாம் பூமியிலே விழுந்து போக அல்ல உயர சிறகடித்து பறக்க அவர் உதவுகிறார். எதற்கு நாம் அவருக்கு

சாட்சியாய் வாழ. இயேசுவின் வாக்குத்தத்தங்களை சுமந்து செல்லும் வாகனம் நாம் (Mobile Bible) இயேசுவின் ஆவியை சுமந்து செல்கிற ஒருகருவி நாம், நாம்தான் அவருடைய சாட்சிகள், மற்றவர்களுக்கு, இயேசுவை குறித்து சொல்லும், சாட்சிகள். பல சாட்சிகளை உருவாக்கும் சாட்சியாக ஆண்டவர் தாமே நம்மை பயன்படுத்துவாராக ஆமென்!

கிறிஸ்துவுக்குள்

அன்பு சகோதரர். **கிறிஸ்டோபர்**

◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇

## அறிவிப்பு பலகைகள் (Notice Boards)

நமது அன்றாட வாழ்க்கையில் நம்மை எச்சரிக்கவும். நமக்கு வழிகாட்டவும் அநேகம் அறிவிப்பு பலகைகள் தெருக்களிலும் கடைகளிலும் வீடுகளிலும் அலுவலகங்களிலும் வைக்கப்பட்டுள்ளன. அவற்றை நமது கிறிஸ்தவ வாழ்க்கையோடு ஒப்பிடக் கூடிய சிலவற்றை இங்கே கவனிப்போம்.

### 1. அபாயம் (Danger)

(1) பாவத்தின் சம்பளம் மரணம் (ரோ. 6:23)

(2) பாவம் செய்கிற ஆத்துமாவே சாகும் (எசேக். 18:4,18)

(3) உங்கள் பாவம் உங்களைத் தொடர்ந்து பிடிக்கும் (எண். 32:23)

### 2. இங்கே நடக்கக் கூடாது (Don´t walk here)

(1) துன்மார்க்கருடைய ஆலோசனையின்படி நடவாதே (சங். 1:1)

(2) மாம்சத்தின்படி நடவாதே (ரோ. 8:1,4,5,- 2.பேது. 2:7,10)

(3) ஒழுங்கற்று நடவாதே (2.தெச.3:6, 2.கொரி. 4:2, எபேசி. 4:17, 5:15)

### 3. நல்வரவு (Welcome)

(1) வருத்தப்பட்டு பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள். நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன் (மத். 11:28)

(2) எல்லாம் ஆயத்தமாயிருக்கிறது. கலியாணத்திற்கு வாருங்கள் (மத். 22:4, லூக். 15:28)

(3) கர்த்தரால் ஆசீர்வதிக்கப்படவரே, உள்ளே வாரும் நீர் வெளியே நிற்பானேன் (ஆதி. 24:31).

### 4. சாப்பாடு தயார் (Meals Ready)

(1) ஜீவ அப்பம் நானே, என் மாம்சத்தைப் புசித்து என் இரத்தத்தைப் பானம்பண்ணுகிறவனுக்கு நித்தியஜீவன் உண்டு. (யோ. 6:48,54 -56, 1.கொரி. 11:26, 10:16-17)

(2) என் தகப்பனுடைய கூலிக்காரர் எத்தனையோ பேருக்கு பூர்த்தியான சாப்பாடு இரக்கிறது. நானோ பசியினால் சாகிறேன் (லூக். 15:17, ஆதி. 25:34)

(3) கர்த்தருடைய சமுகத்தில் வாசமாயிருக்கிறவர்கள் திருப்தியாகச் சாப்பிடவும் நல்ல வஸ்திரங்களைத் தரிக்கவும் தஅதின் வியாபாரம் அவர்களைச் சேரும் (ஏசா. 23:18, (1.இராஜா. 17:1-6)

# ஊழியர்கள் பகுதி

## நம் தேவனும் நாமும் வானங்களில் ஒன்றாய் உலாவுவோம்

### அன்பே உருவான பிதா

மனித வர்கத்தை தேவன் நம்முடன் ஐக்கியம் கொள்ள வேண்டுமென்ற ஒரே நோக்கத்துடன்தான் உருவாக்கி படைத்து சிருஷ்டித்தார். இதை நாம் எப்போதும் மனதில் கொள்ள வேண்டும். தேவன் தனது மக்களுடன் உலாவி பேசி, சஞ்சரிக்க விரும்புகிறார். நாம் அவரிடம் கெஞ்சி, அவரிடம் காரியத்தை சாதித்து கொள்ள வேண்டிய உறவு அல்ல. அவரே நம்மிடம்ஐக்கியம் கொள்ள எண்ணம் கொண்டிருக்கிறார்.அவரே இந்த உறவை விரும்புகிறார். இந்த ஐக்கியத்தைக் பெற்றுக் கொள்ள குறிப்பிட்ட தகுதிகள் சட்ட ஒழுங்குகள் ஆகியவற்றை நம் மீது அவர் திணிக்கவே இல்லை. அன்பே உருவான பரம தகப்பனும் அவரது பிள்ளைகளாகிய நமக்கு இருக்ககூடிய மிக எளிதான உறவுதான் இந்த ஐக்கியம்.

இதை புரிந்து கொள்வதற்கு ஒரு எளிதான காரியம்: தேவன் அன்பே உருவானவர்! அவர் நமது அன்பான தகப்பன். நமது குழந்தை போன்ற குரலை அவர் கேட்கிறார் என்ற இந்த காரியங்களை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும் அல்லது ஒத்துக் கொள்ள வேண்டும்.

ஒரு அன்பு நிறைந்த தகப்பன் தனது குரலை தனது பிள்ளை கேட்பதை ஒரு சிக்கலான காரியமாக வைப்பாராக? தம்மோடு இனிமையாக எளிமையாக தமது பிள்ளைகள் ஐக்கியம் கொள்வது கூடாத காரியமென்றால் நம்மை அவர் சிருஷ்டித்ததன் அர்த்தம் என்ன? அவரது பிள்ளைகளாகிய நாம் தேவனுடன் ஐக்கியம் கொள்வது மிகக்கடினமானது அல்லது சாத்தியமற்றது என்றால், தேவன் தமதுகுமாரனாகிய இயேசு கிறிஸ்துவை இந்த உலகத்திற்கு அனுப்பினது பொருளற்றதாக இருக்குமே.

### தம்மை அறிந்து கொள்வதற்கு மட்டுமா இந்த வேத வார்த்தைகள்

எழுதப்பட்டுள்ளவேத வார்த்தைகளில் தேவன் தம்மை வெளிபடுத்தி இருக்கிறார். வேத வார்த்தைகளின் மூலம் தமது மக்களுடன் பேசுகிறார். அவருடைய வார்த்தைகளே தேவனுடன் உறவு கொள்வதற்கு அடிப்படையான ஆதாரம்.

அவருடன் ஒரு நேரிடையான தனித்தொடர்பு கொள்ள இயலாதா? தனிப்பட்ட முறையில் தமது மக்களுடன் பேசும் திறன் தேவனுக்கு இல்லையா? தேவனுடைய, குறிப்பிட்ட திட்டவட்டமான கட்டளைகளுக்கு கீழ்படிந்து அவற்றை பின்பற்றி தேவனுடன் சஞ்சரித்த ஆண்களையும், ஸ்திரிகளையும் பற்றி வேத வாக்கியம் நமக்கு கூறுகின்றது

(இன்னும் தொடரும்)

# 2012 பிப்ரவரி மாத வேத வினாவிற்கான பதில்கள்.

1. சாலொமோன் 2 நாளாகமம் - 7- 1
2. கர்த்தருடைய கண்கள் 2 நாளாகமம் - 16 - 9
3. எசேக்கியா ராஜா 2 நாளாகமம் - 32 - 9
4. ஆசா 2 நாளாகமம் - 16 - 14
5. பெக்கா 2 நாளாகமம் - 28 - 6
6. மனாசே 2 நாளாகமம் - 33 - 20
7. உசியா 2 நாளாகமம் - 26 - 9
8. சாலொமோன் 2 நாளாகமம் - 6 - 13
9. -----
10. அத்தாலியாள் - அகசியாவிற்கு 2 நாளாகமம் - 22 - 3
11. அமத்சியா ராஜா 2 நாளாகமம் - 25 - 6
12. சேரா 2 நாளாகமம் - 14 - 9
13. உசியா 2 நாளாகமம் - 26 - 9
14. எசேக்கியா 2 நாளாகமம் - 32 - 31
15. யோசபாத் 2 நாளாகமம் - 16 - 11,12

## 2012 பிப்ரவரி மாத வேத வினாவிற்கு விடை எழுதியவர்கள்

சகோதரி. எஸ்தர் விசு
சகோதரி. மரகதம் ஸ்டீஃபன்
சகோதரி. குமுதினி வில்ன்ஸன்
சகோதரி. அனுஷூயா டேவிட்சன்
சகோதரி. ஜோன் அசோக்
சகோதரி. லதா கிறிஸ்டோபர்
சகோதரி. டல்சி கருணாகரன்
சகோதரி. சுகந்தி தம்புகுமார்
சகோதரி. ஜெபா
சகோதரி. பத்மினி வர்கீஸ்
சகோதரி. சாந்தி ஸ்ரீனிவாசன்
சகோதரி. பிங்கி சாம்
சகோதரர். ஜான்ஸன்
சகோதரர். மணிராஜ்
சகோதரர். ஜான்
சகோதரர். அசோக் ராஜ்

**சபை வாக்குத்தத்தம் – 2012**

**பலங்கொண்டு திடமனதாயிரு திகையாதே, கலங்காதே, நீ போகும் இடமெல்லாம் உன் தேவனாகிய கர்த்தர் உன்னோடே இருக்கிறார்என்றார்.** யோசுவா 1:9

# 2012 மார்ச் மாத வேத வினா பகுதி

1. தன் ஆத்துமாவை கெடுத்து போடுகிறவன் இவன் யார்?

2. எது முக மலர்ச்சியை தரும்?

3. திரு வசனத்தை அவமதிக்கிறவன் நாசமடைவான் என்றது யார்?

4. ஜீவ வழியில் இருக்கிறவன் யார்?

5. ஜீ வபாதையில் வந்து சேராதவர்கள் யார்?

6. எவைகளை கழுத்திலே பூண்டு இருதயமாகிய பலகையில் எழுத வேண்டும்?

7. அவன் இருதயத்தின் நினைவு எப்படியோ அப்படியே அவனும் இருக்கிறான் என்று வாசிப்பதெங்கே?

8. வாலிபரின் அலங்காரத்தை குறித்து எங்கே வாசிக்கிறோம்?

9. யாருக்கு ஒரு கேடும் வராது?

10. பட்டினத்தில் தீ கொளுத்தி விடுகிறவன் யார்?

11. நீதிமான்களோடு கர்த்தருடைய இரகசியம் இருக்கிறது என்றவர் யார்?

12. அம்பு யாருடைய ஈரலை பிளந்தது?

13. பசியுள்ளவனுக்கோ கசப்பான பதார்த்தங்களும் தித்திப்பாய் இருக்கும் என்றது யார்?

14. சர்ப்பத்தால் கடிக்கப்பட்டவர்கள் யார்?

15. மூடனை உரலில் போட்டு உலக்கையினால் நொய்நோடே நொய்யாக குத்துவதை குறித்து எழுதியது யார்?

விடைகளை வருகின்ற **23-03-2012** க்குள் சபையின் செயலாளரிடம் நேரில் கொடுக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள். விடைகளை **நீதி மொழிகள்** புத்தகத்தில் தேடி கண்டுபிடிக்கவும்

"வானத்தையும் பூமியையும் உண்டாக்கின கர்த்தர் சீயோனிலிருந்து உன்னை ஆசீர்வதிப்பாராக"
சங்கீதம்: 134:3

## இந்த மாதம் பிறந்த நாளை சிறப்பிக்கிறவர்கள்

செல்வன். ஜான்ராஜ் ராஜவேல் - செல்வன். காலேப் ஜோஸ்வா மார்டீன்
செல்வன். நிரஞ்சன்பால் வின்செனட்பிரதீப் - செல்வன். காலேப் சாலமன்
செல்வன். ஜோஸ்வாகௌசம் பால்பாண்டியராஜ் -செல்வன்.ஆட்ரியல் கெமுயல்
செல்வன். ராயன் காபிரியல் சாமுவேல் - செல்வன். ஜெகு சாமுவேல்

செல்வி. அபியா செலவி - செல்வி. ரேஸ்மின் சான்யு
செல்வி. ஜெஸ்வினி ஆரோக்கியதாஸ்ஏசுதாஸ் செல்வி .ஜாஸ்மின் ஏஞ்சல்
செல்வி. ஜான்ஸி ராணி ராஜவேல் செல்வி. ஜெனீட்டா பிரசன்ன ராஜாசிங்
செல்வி. நிக்கிதா இவாஞ்சிலின் அருண் இம்மானுவேல்
செல்வி. ஸ்டெஃபானா சத்தீஷ் குமார்

சகோதரி. வித்யா வில்சன் சகோதரி. இந்திரா ராஜாசிங்
சகோதரி. ஆஸ்லி விஜய் இம்மானுவேல் சகோதரி. ஜெமி டேனியல்
சகோதரி. நீலாவதி சகோதரி. சீஜோ

சகோதரர். ஜான் மில்லர் சகோதரர். விசு
சகோதரர். இயேசு ரத்தினம் சகோதரர். முத்தையா
சகோதரர். ரவிச்சந்திரன் சகோதரர். ஆல்வின்
சகோதரர். பால் டேனியல் சகோதரர். ஜெயகுமார்
சகோதரர். சுனில் சகோதரர். E.சாமுவேல்
சகோதரர். அசோக்ராஜ் சகோதரர். சின்னசாமி யோவேல்

<u>நீ நீர்ப்பாய்ச்சலான தோட்டத்தைப்போலவும், வற்றாத நீரூற்றைப்போலவும் இருப்பாய்.</u>

## இந்த மாதம் திருமண நாளை சிறப்பிக்கிறவர்கள்

**திருமதி-திரு. ஆசீர்வாதம்**

**திருமதி-திரு. சுகுமாரன்**

**திருமதி-திரு. தாமஸ் ரவீந்திரன்**

**திருமதி-திரு. சத்தியநாதன்**

# 2012 மார்ச் மாத ஆலய ஆராதனை

**வெள்ளி ஆராதனை நேரம் மாலை 4 -10 முதல் 5-45 வரை**

| நாள் | ஆராதனை | செய்தி |
|---|---|---|
| 02-03-2012 | சகோ. ஜஸ்டின் சுந்தர்ராஜ் | சகோ. கிறிஸ்டோபர் |
| 09-03-2012 | சகோ.ஜெயசேகர் | சகோ. ஐசக்துரை |
| 16-03-2012 | உபவாச திருவிருந்து ஆராதனை | |
| 23-03-2012 | வாலிபர் ஐக்கிய குழு ஆராதனை | |
| 30-03-2012 | சகோ. ரவிச்சந்திரன் | சகோ.ஸ்டீஃபன் |

**ஞாயிறு ஆராதனை நேரம் மாலை 5-00 முதல் 6-15 வரை**

| நாள் | செய்தி |
|---|---|
| 4-03-2012 | சகோ. ரவிச்சந்திரன் |
| 11-03-2012 | சகோ. விசு |
| 18-03-2012 | சகோ. ஜெயசேகர் |
| 25-03-2012 | சகோ. ஆரோக்கியதாஸ் |

8/03/2012 அன்று முழுஇரவு ஜெபம் - V-Meet சகோ **மேஷாக்**
அவர்கள் மூலம் நடத்தப்படும் **கதாகாலட்ஷேபம்**
**இடம் : பரிசுத்த பவுல் ஆலயம், அஹமதி குவைத்.**
**நேரம் : இரவு 11:00முதல் காலை 3:00 மணி வரை**

12/03/2012 அன்று சகோதரிகள் ஐக்கிய கூடுகை
சகோதரி. மெர்ஸி ஜான்ஸன் அவர்கள் இல்லத்தில் வைத்து நடைபெறும்
**இடம் : அபுஹலிஃபா**

23/03/2012 அன்று வாலிபர் ஐக்கிய கூடுகை
**இடம் : பாஹீலில் உள்ள சபை ஜெப இல்லத்தில் வைத்து நடைபெறும்**
(Sponcer - சகோ சுகுமார் அவர்கள்)

# குடும்ப பகுதி

## கிறிஸ்தவ குடும்பம் பரலோகத்தின் வாசல்

### பெற்றோர்கள் பிள்ளைகளின் முன்பில் முன் மாதிரியாக இருக்க வேண்டும்...

**உங்கள் பிள்ளைகளை அருகில் வைத்துக் கொண்டு அவர்களுக்காக ஜெபியுங்கள். ஒரே தவறை உங்கள் பிள்ளைகள் செய்யும் பொழுது ஒரு முறை கண்டித்தும் ஒரு முறை கண்டும் காணாதது போல பாராமுகமாகவும் இராதேயுங்கள், அப்பா தண்டிப்பது, அவரது மனநிலை (Mood)ஐ பொறுத்தது, அதற்கு சீரான அளவு கோல் கிடையாது, என்று உங்களை பற்றி உங்கள் பிள்ளைகள் எண்ண இடம் கொடுக்காதீர்கள், பிள்ளைகள் கேட்பதை எல்லாம் வாங்கி கொடுப்பது பெற்றோர் இடத்தில் காணப்படும் ஒரு கெட்ட பழக்கம். அதை காட்டிலும் கேடான ஒரு கெட்ட பழக்கம் பெற்றோரிடத்தில் உண்டு அது என்னவென்று பார்ப்போமானால்அதை வாங்கி தருகிறேன் இதை வாங்கி தருகிறேன் என்று பிள்ளைகளிடம் சொல்லி விட்டுபின்பு அதை நிறைவேற்றாமல் இருப்பது, எதையும் எளிதில் வாங்கி தருவதாக சொல்லி வாக்கு கொடுக்காதீர்கள். அப்படி வாக்கு கொடுத்தீர்கள் என்றால் எக்காரணத்தை முன்னிட்டும்வாங்கி கொடுக்க தவறாதீர்கள்.**

**பிதாக்களே - உங்கள் பிள்ளைகளை கோபப்படுத்தாமல் கர்த்தருக்கேற்ற சிட்சையிலும் போதனையிலும் வளர்ப்பீர்களாக. (எபே 6:4)பிள்ளைகளே உங்கள் பெற்றோருக்குக் கர்த்தருக்குள் கீழ்படியுங்கள் அது நியாயம்(எபே 6:1)புருஷனானவன் தன் தகப்பனையும் தாயையும் விட்டு தன்மனைவியோடு இசைந்திருப்பான், அவர்கள் இருவரும் ஒரே மாம்சமாயிருப்பார்கள். இவ்விதமாய் அவர்கள் இருவருமாகயிராமல் ஒரே மாம்சமாயிருக்கிறார்கள், ஆகையால் தேவன் இணைத்ததை மனுஷன் பிரிக்காதிருக்கக் கடவன், மனைவிகளே கர்த்தருக்கு கீழ்படிகிறது போல உங்கள் சொந்த புருஷருக்கு கீழ்படியுங்கள். புருஷர்களே உங்கள் மனைவிகளில் அன்பு கூருங்கள், (எபே 5:22,25)**

## குடும்பத்தின் குறைவும் இயேசுவின் நிறைவும் (யோ 2:1-11)

**இயேசுவும் அவரது சீஷரும் அந்த கல்யாணத்திற்கு அழைக்கப்பட்டிருந்தார்கள். திராட்சை ரசம் குறைவு பட்டபோது, இயேசு அற்புதத்தை செய்து தம்முடைய மகிமையை வெளிபடுத்தினார்.**

## இயேசு அழைக்கப்பட்டது ஒரு சிறப்பு

**வசனம் இரண்டு இயேசு கானாவூர் கல்யாண வைபவத்திற்கு அழைக்கப்பட்டிருந்தார் என்று கூறுகிறது. கானாவூரில் இயேசு கிறிஸ்துவின் நாட்களில் அநேக திருமணங்கள் நடைபெற்றிருக்க கூடும் ஆனால்**

**மேற்கூறப்பட்டுள்ள திருமணம் முக்கியம் வாய்ந்ததாக வேதாகம சரித்திரத்தில் இடம் பெற்ற மேன்மையுடைதாய் இருக்கிறது.**

**காரணம் அந்த கல்யாணத்திற்கு இயேசு கிறிஸ்து அழைக்கப்பட்டிருந்தார். கல்யாணம் சாதாரணமானதுதான். ராஜா வீட்டு கல்யாணமும் அல்ல. பிரபு வீட்டு கல்யாணமும் அல்ல, சாதாரண குடம்பத்தை சேர்ந்த கல்யாணம், ஆயினும் தேவ குமாரன் இயேசு கிறிஸ்துவை அக்கல்யாணத்திற்கு அழைக்கப்பட்டிருந்தபடியால் சிறப்புடைய கல்யாணமாகிவிட்டது.**

## இயேசுவை அழைத்தால் உங்கள் இல்லமும் சிறப்புடையது,

**பிரியமானவர்களே இயேசு கிறிஸ்துவை உங்கள் இல்லத்திற்கு அழைத்தால் உங்கள் குடும்பம் விஷேசமாக அமையும்.சாதாரண குடும்பமாக, உங்கள் குடும்பம் இருக்கலாம். இயேசு உங்கள் குடும்பத்தில் அழைக்கப்பட்டிருந்தால், இயேசுவுக்கு உங்கள் குடும்பத்தில் முக்கிய இடம் அளிக்கப்படடிருந்தால், உங்கள் குடும்பம் சிறப்புடைய குடும்பமாக இருக்கும். இயேசு உங்கள் இல்லத்தில் இருக்கிறாரா? சகேயு வீட்டில் பிரவேசித்து தங்கின இயேசு உங்கள் வீட்டில் தங்கி இருக்கிறாரா? ஆராய்ந்து பாருங்கள், எப்படி நாம் தெரிந்து கொள்வது. இயேசு வந்த வீட்டில் சந்தோஷம், இயேசு வந்த வீட்டில் சமாதானம், இயேசு வந்த வீட்டில் குறைவுகள் இல்லை, இயேசு வந்த வீட்டில் சண்டை சச்சரவு இல்லை, அங்கே நான் உயர்ந்தவன், நான் உயர்ந்தவள் என்ற ஏற்ற தாழ்வுகள் இல்லை. சம்பாதிக்கிறோம் என்கிற ஆனவம் ஆண்களுக்கும் பெண்களுக்கும் இராது. சம்பாதிக்கவில்லை என்கிற தாழ்வு மனப்பான்மையும் இருக்காது. மனைவி கனிதரும் திராட்சை செடி, பிள்ளைகள் ஒளிவ மரக்கன்றுகள் இயேசுவை தங்களுடைய வீட்டிலே ஏற்றுக் கொண்ட குடும்பங்கள் இவ்விதமாய் ஆசீர்வதிக்கபட்டிருக்கிறது. அப்படி நம்முடைய இல்லம் இயேசு கிறிஸ்து இல்லாத இல்லமாக இருந்தால் இன்றே இயேசுவை வருந்தி அழைப்போம் நம் இல்லத்திற்கு நம்முடைய இல்லத்தில் இயேசுவை நிரந்தரமாக தங்கும்படியான வழி வாசலை திறந்து கொடுப்போம். இயேசு தங்கும் வீடு உண்மையிலேயே உன்னத வீடு. சிறப்புடைய வீடு - அல்லேலூயா!**

## இயேசு இருந்த இடத்தில் குறைவு

**இயேசு அழைக்கப்பட்டிருந்த கல்யாண வீட்டில் நடந்த முக்கிய சம்பவம் என்ன ? இயேசு அழைக்கப்படடிருந்ததால் என்ன அற்புதம் நடந்தது?**

**மூன்றாவது வசனம் சொல்லுகிறது, திராட்சை ரசம் குறைவு பட்டது என்று இயேசு அழைக்கப்பட்ட இடத்தில் குறைவு உண்டாயிற்று. இயேசு கலந்து கொண்ட வைபவத்தில் குறைவு, இயேசு இருக்கும் இடத்தில் குறைவு.இயேசு கலந்து கொண்ட இல்லற நிகழ்ச்சியில் நிறைவுக்கு பதில் குறைவு உண்டாயிற்று.**

**அப்படியானால் இயேசுவை அழைத்தால் குறைவுதான் உண்டாகுமா? எல்லாவற்றையும் எல்லாவற்றாலும் நிரப்புகிறவரான இயேசு கிறிஸ்து இருக்கும் இடத்தில் குறைவா? குறைவு ஏற்படத்தான் இயேசுவை அழைத்தார்களா?இயேசு**

# நீ என் தாசன்

வசனம்: ஏசாயா 44:21 22 “யாக்கோபே , இஸ்ரவேலே இவைகளை நினை நீ என் தாசன். நான் உன்னை உருவாக்கினேன். நீ என் தாசன் இஸ்ரவேலே நீ என்னால் மறக்கப்படுவதில்லை” “உன் மீறுதல்களை மேகத்தைப்போலவும் உன் பாவங்களை கார்மேகத்தை போலவும் அகற்றி விட்டேன். என்னிடத்தில் திரும்பு உன்னை நான் மீட்டுக்கொண்டேன்.

ஆண்டவர் கூறும்வார்த்தைகளை நாம் தியானிக்க போகிறோம். ஆண்டவர் நம்முடைய அக்கிரமங்களை, பாவங்களை மன்னித்து, தம்முடைய பரிசுத்த இரத்தத்தினால் கழுவி தம்மோடு சேர்த்துக்கொள்கிற தேவனாகயிருக்கிறார். ஆண்டவர் உங்களோடு இருக்கவிரும்புகிறார். தம்முடைய வாசஸ்தலமாக நம்முடைய இருதயத்தில் வந்து வசிக்க விரும்புகிறார். ஆகவே நம்மை “நீ என் தாசன் நீ என்னால் மறக்கபடுவதில்லை என்று கூறுவது மட்டுமல்லாமல் நான் உன்னை விட்டு விலகுவதுமில்லை, உன்னை கைவிடுவதுமில்லை என்ற வாக்குத்தத்தத்தை உறுதிப்படுத்துகிறார். உலகத்தில் உள்ள எல்லா ஆசீர்வாதங்களிலும் பெரிய ஆசீர்வாதம் தேவனுடைய பிரசன்னம்தான். மற்றதெல்லாம் வெறும் குப்பை. கர்த்தர் நம்மோடு இருப்பது தான் நமக்கு கிடைத்திருக்கும் மேன்மையாகும். அவர் நம்மோடு வசிக்கும்போது நமக்கு சந்தோஷம், சமாதானம், பெலன், எந்த பிரச்சனையும் எதிர்கொள்ளும்திறமை, நம்முடைய எதிரி நம்மை மேற்கொள்ளாமல் இருப்பது எல்லாம் நமக்கு கிடைக்கும் ஈவாகும். நம்மில் சிலர் உலக பிரகாரமாக சிற்றின்பங்களில் நிலைத்து ஆண்டவரை மறந்து போகிறோம். 2நாள15:2 ல் “நீங்கள் கர்த்தரோடிருந்தால் அவர் உங்களோடிருப்பார். நீங்கள் அவரைத்தேடினால் அவர் உங்களுக்கு வெளிப்படுவார். அவரை விட்டுவிட்டீர்களேயாகில் அவர் உங்களை விட்டு விடுவார்.

யோசேப்பு: தம்முடைய வாழ்க்கையில் கர்த்தர் தம்மோடு கூட இருக்கிறாரா என்று சீர்தூக்கி பார்த்து அவருடைய பிரசன்னத்தில் தன்னை நிலை நிறுத்தி கொண்டாராம். ஆதி 39:23 கர்த்தர் அவனோடே இருந்தபடியினாலும் அவன் எதைச்செய்தானே அதை கர்த்தர் வாய்க்கப்பண்ணினபடியினாலும் என்று பார்க்கிறோம். நாம் ஆண்டவரை துக்கப்படுத்தி வேதனைப்படுத்தி இந்த உலக காரியங்களில் சந்தோஷத்தை அனுபவிக்காமல் யோசேப்பு எப்படி ஜீவித்தாரே அது போன்ற வாழ்க்கையில் கர்த்தரோடு ஜீவிக்க வேண்டும்.

மிகத்தாழ்விலிருந்து மிக உயரமான இராஜாவாக சகல இஸ்ரவேலருக்கும் மன்னனாக தாவீது உயர்த்தப்பட்டார். அதற்கு காரணம் சிறு வயதிலிருந்து ஆண்டவரை நேசித்து தேவனுடைய தீர்க்கதரிசியாக சங்கீதத்தை இனிமையாக பாடிக்கொண்டு ஆண்டவரைத் துதித்துக்கொண்டே இருந்ததே. கர்த்தர் பரலோக தேவதூதர்களோடு ஐக்கியமாக இருப்பதை பார்க்கிலும் நம்மோடு தம்முடைய பிள்ளைகளோடு அதிக ஐக்கியமாய் இருக்க விரும்புகிறார். அதற்காகவே ஐக்கியத்தை விரும்பி பரலோக மேன்மையை துறந்து அடிமையின் ரூபம் எடுத்தார். அவர் இந்த உலகத்தில் இருந்த காலத்தில் பிதாவாகிய தேவன் இயேசுகிறிஸ்துவோடு இருந்தபடியினால் அவருடைய மகிமை, கிருபை எல்லாம் கூடவேயிருந்தது. அதனால் இயேசுகிறிஸ்து நன்மை செய்கிறவராக சுற்றித்திரிந்தார். உலகத்திலிருந்த சகல நாட்களிலும் பிதாவை பிரியப்படுத்துவதும், அவருடைய சித்தத்தின்படி செய்கிறவராக இருந்தார். நாமும் அவரை முன்மாதிரியாக வைத்து அவருடைய வழிகளில் நடக்க ஜீவிக்க கற்றுக்கொள்ளவேண்டும்.

கடைசியாக ஆண்டவர் நம்மிடம் எதிர்பார்ப்பது அவருக்கு முன்பாக பணிந்து குனிந்து முழங்கால் படியிட்டு ஆராதிக்கவேண்டும். உபா 26:10 வசனத்தின்படி நம்முடைய முதற்பலனைக் காணிக்கையாக தசமபாகமாக கொடுக்க வேண்டும். அவரை உன் முழு இருதயத்தோடும் முழு

ஆத்மாவோடும், முழு மனதோடும் அவரில் அன்புக்கூரவேண்டும். எபேசியர் 4:31, 32 என்ற வசனத்தின் படி சகலவிதமான கசப்பும், கோபம், மூர்க்கம், தூஷணம்பேசுதல் எல்லாவற்றையும் விட்டுவிட்டு ஒருவொருக்கொருவர் தயவாயும், மன உருக்கமாயும், அன்புடன் இருந்து கிறிஸ்துவுக்குள் தேவன் உங்களுக்கு மன்னித்தது போல நீங்கள் ஒருவருக்கொருவர் மன்னித்துசந்தோஷமாக சமாதானமாக ஆண்டவருக்குள் நம் வாழ்க்கையை அமைத்துக்கொள்ள வேண்டும். அப்பொழுது ஆண்டவர் நம்மைப்பார்த்து “நீ என் தாசன் உன்னை நான் உருவாக்கினேன் நீ என்னால் மறக்கப்படுவதில்லை” என்று கூறுகிறார். நாம் ஆண்டவருடைய பிள்ளைகளாக வாழ்ந்து நம் ஜீவிய ஓட்டத்தை முடிப்போமாக!

கர்த்தர் கொடுத்த வார்த்தைகளுக்கு ஸ்தோத்திரம்.

கிறிஸ்துவுக்குள்

அன்பு சகோதரி **டல்சி கருணாகரன்**

◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇

## வாலிபர் பகுதி

Praise the Lord

# ஞானம்

**கிறிஸ்துவுக்குள் மிகவும் அருமையான சகோதர சகோதரிகளுக்கு ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்.**

**வாலிப பருவம் என்பது ஆண்டவருக்கு மிகவும் பிடித்த ஒரு பருவம், ஏனென்று கேட்கிறீர்களா! ஏனெனல் இயேசுவும் ஒரு வாலிபர்தான். இது பொது தேர்வு நடைபெறுகிற காலமாக இருப்பதால் இது பிரஜோனமாக இருக்கும் என்று நினைக்கிறேன் உங்களில் ஒரு சிலர் பரீச்சையை எதிர்நோக்கி கொண்டு இருக்கலாம் சிலர் பரீட்சை வரும் முன் கடைசி பரீட்சை எப்பொழுது வரும் என்று கடைசி பரீட்சையை எதிர்நோக்கி காத்துகொண்டு இருப்பார்கள் ஏனெனில் அன்றுதான் நிம்மதி இந்த படிப்பில் இருந்து 2 மாதகாலத்திற்கு விடுதலை என்று.**

**இன்னும் ஒரு சிலர் நேர்முக தேர்வுக்கென்று காத்திருக்கலாம் அவர்களெல்லாரும் சப்ஜட்டை குறித்து அதை உருவாக்கியவர்களை குறித்து அங்கலாத்து கொண் டிருக்கலாம், இவர்களெல்லாருக்கும் இந்த செய்தி சுவிஷேசமாக இவர்களுக்கு வருகிறது.**

உலகிலேயே மிகப்பெரிய ஞானியாகிய சாலொமோன் சொல்கிறார்.

1. ஞானமுள்ளவனுக்கு ஒப்பானவன் யார்? (பிரசங்கி 8:1)
2. யுத்த ஆயுதங்களைப்பார்க்கிலும் ஞானமே நலம் (பிரசங்கி 9:18)
3. ஒரு காரியத்தைச் செவ்வையாய்ச் செய்வதற்கு ஞானமே பிரதானம்.(பிரசங்கி 10:10)
4. ஞானமுள்ளவர்களுடைய நாவோ ஒளஷதம் (நீதி 12:18)

ஞானத்தை கண்டடைகிற மனுஷனும் புத்தியை சம்பாதிக்கிற மனுஷனும் பாக்கியவான்கள்.

 இப்படிபட்ட ஞானத்தை சம்பாதித்துக் கொள்ள நான் என்ன செய்ய வேண்டும் என்ற கேள்வி உங்களுக்குள் எழும்புகிறதா?

உங்களுக்கான இரகசியங்கள் இங்கே

## 1 இயேசுவே ஞானம்

**இயேசுவே, தேவனால் நமக்கு ஞானமும், நீதியும், பரிசுத்தமும், மீட்புமானார். (1 கொரி 1:31)**

**எப்பொழுது இயேசுவுக்கு நீங்கள் உங்கள் இருதத்தில் இடம் தருகிறீர்களோ. அப்பொழுது ஞானம் உங்களுக்கு வந்துவிடுகிறது.**

**யாக்.3:17ல் ஞானம் பரத்திலிருந்து வருகிறது என்று சொல்லப்படுகிறது.**

**ஒருவராலும் எதிர்த்து நிற்க கூடாத ஞானத்தினால் நிரம்பிய ஸ்தேவான் என்னும் வாலிபனை(அப் 6:10ல் )காண்கிறோம்.**

**இவ்வுலகில் அதிக வருஷங்கள் வாழ்ந்த மெத்துசலாவை (969 வருஷம்) பார்க்கிலும், கொஞ்ச வருஷங்கள் வாழ்ந்தாலும் ஞானத்தால் நிரம்பிய ஸ்தேவான், நமக்கு சவாலாய் இருக்கிறான். இவ்வுலகில் எவ்வளவு நாட்கள் வாழ்கிறோம். என்பது முக்கியமல்ல, எப்படி வாழ்கிறோம் என்பதே முக்கியம்.**

**‘எனக்குள் இயேசு இருப்பதால், நான் ஞானமுள்ளவனாய் இருக்கிறேன், என்று ஒவ்வொரு நாளும், சத்தமாய் அறிக்கையிடுங்கள், நிச்சயம் வெற்றி பெறுவீர்கள்.**

## 2 வேத வசனங்களினால் வரும் ஞானம்

**கர்த்தருடைய வேதம் குறைவற்றதும் ஆத்துமாவை உயிர்பிக்கிறதுமாயிருக்கிறது. கர்த்தருடைய சாட்சி (வேதம்) சத்தியமும் பேதையை ஞானியாக்குகிறதுமா யிருக்கிறது(சங் 19:7)**

**ஆடுகளை மேய்த்த தாவீது,முழு இஸ்ரவேலையும் ஆளத்தக்க ஞானத்தை பெற்றுக் கொண்டது எப்படி தெரியுமா?**


**யுத்தங்களை வெல்ல, விஷேசித்த ஞானத்தை பெற்றுக் கொண்டது எப்படிதெரியுமா? சங் 119:98,99,100ல் அதின் இரகசியத்தை சொல்லுகிறான்.**

**‘நீர் உம்முடைய கற்பனைகளை கொண்டு என்னை என் சத்துருக்களிலும் அதிக ஞானமுள்ளவனாக்குகிறீர்.**

**உம்முடைய சாட்சிகள் என் தியானமாய் இருக்கிறபடியால் எனக்கு போதித்வர்களெல்லாரிலும் அறிவுள்ளவனாயிருக்கிறேன். எனவே வேத வாசிப்பை மற்ற நாட்களைவிட பரீட்சை மற்றும் நேர்முக தேர்வு இப்படிபட்ட நாட்களில் அதிகப்படுத்துவோம்**

(வரும் காலங்களிலும் இரகசியம் தொடரும்)

# சகோதரிகள் பகுதி



## சோதனையில் வெற்றி

கிறிஸ்துவுக்குள் பிரியமான அன்பு சகோதரிகளுக்கு உயிர்த்தெழுந்த இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள். இந்த வருடத்தின் மூன்றாவது மாதத்தின் செய்தி மலரில் சகோதரிகள் பகுதியின் மூலமாக தங்களை சந்திப்பதில் ஆண்டவருக்குள் மகிழ்ச்சி அடைகிறேன்,கிறிஸ்துவுக்குள் பிரியமான அன்பு சகோதரிகளே! இந்த மலர் மூலம் பரிசுத்த ஆவியானவரால் அருளப்பட்ட வார்த்தைகளில் இரண்டு வார்த்தைகளை குறித்து தங்களுடன் சேர்ந்து அடியாளும் தியானிக்க கர்த்தர் அருள் புரிவாராக!

## முதல் வார்த்தை

**சோதனையைச் சகிக்கிற மனு(ஷி)ஷன் பாக்கியவான், அவன்(ள்) உத்த(மி)மனென்று விளங்கினபின்பு கர்த்தர் தம்மிடத்தில் அன்புகூருகிறவர்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணின ஜீவகிரீடத்தைப் பெறுவான். (வாள்) (யாக்கோபு 1:12)**

பிரியமான சகோதரிகளே ஆண்டவருடைய வசனம் அவரால் உண்டாக்கப்பட்ட ஆதாமுக்கும் பொருந்தும் ஏவாளுக்கும் பொருந்தும் அல்லவா? ஆகவேதான் அதை இப்படி எழுதியிருக்கிறேன். அன்பான சகோதரிகளே வேதத்தில் அனைவருக்கும் நன்றாக தெரிந்த பகுதி இந்த பகுதியை குறித்து இந்த லெந்து நாட்களிலே தியானிப்பது பொறுத்தமாக இருக்கும் என்று கர்த்தருக்குள் நான் விசுவாசிக்கிறேன்.

ஆண்டவராகிய ‘‘இயேசு பரிசுத்த ஆவியினாலே நிறைந்தவராய் யோர்தானை விட்டுத் திரும்பி,ஆவியானவராலே வனாந்தரத்திற்குக் கொண்டுபோகப்பட்டு, நாற்பது நாள் பிசாசினால் சோதிக்கப்பட்டார் என்று லூக்கா 4 ஆம் அதிகாரத்தில் இதை குறித்து வாசிக்கிறோம்.ஆண்டவருக்கும் சோதனை காலம் இருந்தது ஆண்டவரை சோதிக்க சாத்தான் எம்மாத்திரம் ஆனாலும் ஆண்டவர் அதற்கு இடம் கொடுத்தார் ஏனெனில் ஆண்டவருடைய நாமம் மகிமைபட வேண்டும் என்ற ஒரே நோக்கம் ஆண்டவர் நினைத்திருந்தால் சாத்தானை ஒரு நொடியில் ஒன்றும் இல்லாமல் இல்பொருளாக மாற்றியிருப்பார் அதுவல்ல ஆண்டவரின் நோக்கம் தேவ பிள்ளைகள் அவரது அடிச்சுவடிகளை பின்பற்றக்கூடியவர்கள் என்று அந்த நேரத்தில் தேவன் சாத்தானுடைய சோதனைக்கு தன்னைதானே உட்படுத்திக்கொண்டார். ஆகவே ஆண்டவர் சாத்தானுக்கு அடிபணிந்தார் என்று நினைத்தால் நம்முடைய அறியாமைதான் காரணம். ஆண்டவரை பார்த்து சாத்தான் அதே அதிகாரத்தில் தன்னை பணிந்து கொள் இந்த உலகத்தின் அனைத்தையும உன் ஆளுகையின் கீழ் கொண்டு வருகிறேன் என்றான். இந்த புவி அவரால் படைக்கப்பட்டது என்று அவனுக்கு அறியாதது அவனுடைய அறியாமை. பிரியமானவர்களே இன்றும் நமக்கும் அப்படிதான் தேவ பிள்ளைகளின் வாழ்க்கையில் சுலபமாக சாத்தான் சோதனையை கொண்டு வருகிறான். ஆனாலும் எப்படி தேவன் சகித்து கொண்டு சாத்தானை தோற்கடித்தாரோ அதே போல சாத்தான் நம்மை கண்டு வெட்கப்படும்படியாக

எப்படி ஆண்டவர் சாத்தானை பாாத்து பின்னாகப் போ சாத்தானே. என்று அவனை கடிந்து கொண்டதுமல்லாமல் ஆண்டவர் ஒருவருக்கே ஆராதனை செய் என்று எழுதியருக்கிறதே என்று அவனுக்கு ஆண்டவருடைய மகிமையை குறித்து விளக்குகிறாா். இந்த காரியத்தை குறித்து லூக்கா 4:8 இப்படியாக வாசிக்கிறோம் இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக: எனக்குப் பின்னாகப்போ சாத்தானே, உன் தேவனாகிய கர்த்தரைப் பணிந்துகொண்டு, அவர் ஒருவருக்கே ஆராதனைசெய்வாயாக என்று எழுதியிருக்கிறதே என்றார்.பிரியமான சகோதரிகளே ஒரு சில நேரங்களில் நம்முடைய வாழ்க்கையிலும் கூட சாத்தான் (சாத்தானை போல)தரமே இல்லாத மனிதர்கள் மூலம் நமக்கு சோதனைகளை கொண்டு வருவான். அந்த நேரங்களில் ஆண்டவருக்கு நேர்ந்தது போல நமக்கும் நேரிடலாம், என்ன என்று பாாத்தோமானால் தேவன் சோதிக்கப்படும் பொழுது பிதா கூட அவரை இமை பொழுது கை விட்டார் அதுவும் அந்த இடத்தில் பிதாவின் நாமம் மகிமைப்படும்படியாகத்தான் அது போல நாம் நம்பின நமக்கு உரித்தவர்கள் கூட கைவிட்டு விடலாம் நாம் நம்முடைய நாதர் இயேசுவை முன் நிறுத்தி நாம் நமக்கு வந்த சோதனையை சகித்து கொள்வோம் ஆண்டவர் அருளிய ஜீவ கிரீடத்தை பெற்றுக் கொள்வோம்.

## <u>இரண்டாவது வார்த்தை</u>

மனுஷனை நம்புவதைப்பார்க்கிலும், கர்த்தர் பேரில் பற்றுதலாயிருப்பதே நலம். (சங் 118:8) பிரியமான சகோதரிகளே! நாம் மனுஷர்களை நம்புவதை பார்க்கிலும் கர்த்தர் மேல் அதிக நம்பிக்கை வைக்கும் போது அவர் நம்மை எப்பேற்பட்ட காரியமானலும் சரி நம்மை விடுவிக்க வல்லவர். பிரியமான சகோதரிகளே வேதத்தில் நாம் எடுத்துக் கொண்டோமானால் யோசேப்பு தான் செய்யாத ஒரு குற்றத்திற்காக பார்வோனின் சிறைச்சாலையிலே தண்டனை அனுபவித்து கொண்டிருக்கிறார், அந்த நேரத்தில் பானபத்திரக்காரன் ஒருவனின் நட்பு கிடைக்கிறது. அவன் அந்த பான பத்திரக்காரனிடம் தன்னை பற்றி பார்வோனிடம் சொல்லி தன்னை விடுவிக்க கேட்டுக் கொள்கிறான், பிரியமான சகோதரிகளே நடந்தது என்ன? அந்த பானபாத்திரக்காரன் அவனை மறந்து விடுகிறான். நாம் நம்பும் மனிதர்கள் நம்மை கைவிட்டுவிடுவார்கள் இதுதான் மனித அன்பு, நமக்கு உரிமையானவர்கள் கூட நம்மை கைவிட்டு விடலாம் ஆனால் நம்மை பெயர் சொல்லி அழைத்த தேவன் நம்மை கைவிட மாட்டார். குறித்த நேரத்திலே யோசேப்பை பற்றி பார்வோனுக்கு தெரிய வருகிறது, அவர் அவருடைய சொப்பனத்திற்கு சரியான விளக்கம் அளிக்க,அந்த தேசத்திலேயே அவர் பார்வோனுக்கு அடுத்த ஸ்தானத்தில் பிரதான அமைச்சராக அமர தேவன் அருளினாார். பிரியமானவர்களே மனிதர்கள் நம்மேல் செலுத்தும் அன்பு சற்று நேரத்தில் மாறிவிடும் ஆனால் தேவன் நம்மேல் வைத்த அன்பு என்றும் மாறாததாய் இருக்கிறது. மனிதன் முகத்தை பார்க்கிறான் தேவனோ இருதயத்தை காண்கிறார். உண்மையிலேயே தேவனை நம்பி தேவன்பால் நாம் பற்றுதலாய் இருக்கும் போது தேவன் நம்மை ஏற்றநேரத்தில் உயர்த்த அவர் உண்மையுள்ளவர். நாமும் தேவனை சார்ந்து இருப்போம் தேவன் நம்மை ஆசீர்வதிப்பாராக!

கிறிஸ்துவுக்குள்

அன்பு சகோதரி. **எஸ்தர் விசு**

## கடந்த மாத சபையின் நிகழ்வுகளில் ஒரு சில உங்கள் பார்வைக்கு

















உங்களுக்கு ஊழியம் செய்ய எங்களுக்காக ஜெபியுங்கள்

செயலாளர் சகோ. ஜஸ்டின் சுந்தராஜ்

69924812 -- 69950127

பொருளாளர் சகோ. ஜெயசேகர்

23711698 - 66442727 - 90024654

பெண்கள் ஐக்கிய சங்க தலைவி

சகோதரி : அனுஷ"யா டேவிட்ஸன்

23922536 - 97148472

வாலிப ஐக்கிய குழு தலைவர்

சகோ. எபிநேசர் 23922058

சபையின் அஞ்சல் விலாசம்

your Name...... Post box no 46795,
Fahaheel 64018 KUWAIT

Church E mail Address

ahmaditamil.kw@hotmail.com

Church Website Address

www.ahmaditamilcongregation.org

தங்களது ஜெப விண்ணப்பங்கள் எதுவாக இருந்தாலும்
எங்களுக்கு தெரிவிக்கவும்,உங்களுக்காக ஜெபிக்க
எப்பொழுதும் ஒரு குழு ஆயத்தமாய்
இருக்கிறது

Private circulation